முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1314

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.05.2023, வெள்ளிக்கிழமை

1. தர்மராஜனே அரங்கா வாழ்க
   தவபலம் கொண்ட தேசிகா வாழ்க
   கர்மவினை போக்கி கலியுகத்தில்
   கருணைபட உலகோர்க்கு ஞானம் அருளுகின்ற
2. அருளுகின்ற அரங்கனே ஐயனே
   ஆறுமுகன் யான் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
   வரமென நித்தம் தொடர்ந்துரைப்பேன்
   வழங்குவேன் சோபகிருது தகர்திங்களில் இனிதே ஆசிதனை
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் 22 ம் நாள், 05.05.2023, வெள்ளிக்கிழமை)
3. தன்னிலே அரங்கனுக்கு சர்வபலம் கூட்டி
   தண்டாயுதன் யான் பெரும் பாதுகாப்பு தந்து
   அண்ணலுக்கு சுவாசமாக உணவாக
   அனைத்து இயக்கமாக இயங்கிவர அரங்கனுள் யானே இருக்கின்றேன்
4. இருக்கவே இந்த இரகசியம் அறிய
   ஏழாம்படை வீடாம் என்வீடு ஓங்காரக்குடில் நோக்கி
   கருத்தாக உலகோர் வருதல் வேணும்
   கட்டாயம் அரங்கனைக் கண்டு வணங்கி மகாமந்திர தீட்சை ஏற்க வேண்டும்
5. வேண்டி இந்த வகை தொடர்ந்து
   வினவிட அரங்கன் ஆசிபெற்று வந்தால்
   தொண்டர்களாகவும் இணைந்து
   தொடர்ந்து அரங்கன் வழி நடந்தால்
6. நடப்போர்க்கு ஞானிகளாகும் வாய்ப்பு ஞானதேசிகன் வழி ஆறுமுகன் யான் நடத்துகின்றேன்
   தடையற அரங்கன் சக்தி நோக்கி தவமாக உலகோர் தொடர்ந்து வந்தால்
   இடர்களை வென்று இந்த கலியினில்
   இனிதே அரங்கன் வழி வருவோரும் ஞானிகளாவர்
   ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–